# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு | 13 ஏப்ரல் 2025

## எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சமுதாயம் - நல்லிணக்கத்தை நோக்கிய அழைப்பு

**நெஞ்சே!**
**ஆண்டவருக்காகக் காத்திரு;**
**மன உறுதிகொள்; உன் உள்ளம் வலிமை பெறட்டும்.**
**ஆண்டவருக்காகக் காத்திரு**

**திருப்பாடல் 27:14**

இயேசுவோடு பாவிகளும் மன்னிக்கப்படாதவர்களும் தெய்வீக திருஅவையின் நபர்களைத் தொடுகின்ற கடவுளுடைய மக்களின் மேய்ப்புப்பணி பராமரிப்புக்கான புதிய பெயர் “ ஒன்றுகூடலின் மேசை” **நம்முடைய திருஅவை, சமூகம் இவற்றின் சுற்றளவில் உள்ள மக்களுக்கு நாம் திறந்த உள்ளத்தினராய் இருந்தோமென்றால், திருஅவை “வசதியான சூழலில் இருந்து” வரவேற்கும், துணைநிற்கும், உதவிசெய்யும் மற்றும் நமக்காகப் பேசும் திருஅவையாக மாறுகிறது.**

கடினமான மனித துயரங்கள், வேதனையான துன்பங்கள் மற்றும் , நம்பிக்கையின்மை ஆகிய மாவில் நற்செய்தியின் உருமாற்றம் என்னும் புளிப்பு மாவுடன் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். முழுமையான உருவாக்கத்தின் மூலம் கடவுளின் அனைத்து மக்களையும் புதுப்பித்தல் மட்டுமே திருஅவையின் மாற்றத்திற்கும் உலக மாற்றத்திற்கும் வழிவகுக்கும். “கிறிஸ்துவர்களாகிய நாம், முழு மனிதகுலத்துடன் இணைந்து, கிறிஸ்துவோடு அவரின் அரசை நோக்கி ஒற்றுமையுடன் நடக்கும்போது திரு அவை ஒரு தூதுரைப்பணி என்று ஆயர்மாமன்றத்தைப் பற்றி ஆயர்பேரவை அறிவித்ததில் வியப்பொன்றுமில்லை.

இவ்வாறு ஆயர்மாமன்றத்தின் செயல்முறை நமது ஆன்மீகத்தை மனிதகுலத்திற்கான திருஅவையின் சமூகத்துடன் இணக்கமாக ஒன்றிணைக்கிறது. நமது தனிப்பட்ட, புதுப்பித்தல், ஒருவருக்கொருவர் மேம்படுத்தப்பட்ட உறவுகள், மற்றும் நமது மேய்ப்புப்பணியின் பராமரிப்பு பணிக்குழுக்களை சீரமைப்பதற்கான இணைப்பொறுப்பு மற்றும் அதிகாரம், பங்கேற்பு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் கட்டமைப்புகளில் மாற்றம் ஆகியவற்றில் நமது பாதை மிகத்தெளிவாக உள்ளன.

தூதுரைப்பணியில் வாழ்க்கையைப் பற்றிய நமது பார்வை, “கேட்டல், உரையாடல், சமூக பகுத்தறிவு, மற்றும் ஒருமித்த கருத்தை உருவாக்குதல் மூலம் திருஅவை வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் நமது ஒன்றுகூடலின் வழியாகவும், அதன் மூலமாகவும் நற்செய்தியை எடுத்துரைப்பது என்ற அதன் நோக்கத்தில் அடிப்படை கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. இது கிறிஸ்துவின் தூய ஆவியில் உடனிருப்பதையும், ஒவ்வொருவரும் தங்களின் பொறுப்புகளுடன் முடிவுகள் எடுப்பதையும் வெளிப்படுத்துகிறது.

ஆயர் மாமன்றத்தின் சாராம்சம் இயேசுவின் நற்செய்தியின் விதைகள், கடவுளின் மக்களின் ஒரு அங்கமாக திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் விதைகளிலிருந்து வளரும் செடிகளாக வளர, நாற்றங்கல்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நெல் மற்றும் கோதுமை தானியங்கள் தான் கடவுளின் பரிசுகளைப் பகிர்ந்துகொள்வதன்மூலம் மனிதகுல வாழ்க்கைக்கு உயிர் அளிக்கும் அப்பமாகவும் வாழ்வின் உணவாகவும் மாறும்.

நம் திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் உலகளாவிய திருஅவை, தனிமனிதர்களின் மாண்பு, கடவுளின் படைப்புகளுக்கு மரியாதை மற்றும் மனித சகோதரத்துவம் மற்றும் உலகளாவிய அமைதி, மற்றும் நல்லிணக்கத்திற்கான மரியாதை ஆகியவற்றை ஊக்குவிப்பதை நிறுத்தவில்லை. இந்த நம்பிக்கை ஆண்டில், வாழ்நாள் முழுவதும் நாம் சாட்சிமிக்க பயணிகளாக மேலும் அதை நாடுபவர்களுக்கு நம்பிக்கை பரவட்டும். நாம் வாழும் வாழ்க்கையில் நம்பிக்கை, உறுதி துணிவு இருக்கட்டும் என்று சொல்லுங்கள் (திருப்பாடல் 27:14) ✣

திருஅவையின் நோக்கம், அனைத்து மக்களிடையேயும் நம்பிக்கையை தொற்றிக்கொள்ளும் வகையில் பரப்புவதாகும். இந்த தூதுரைப்பணியில் மட்டுமே மனிதகுலத்தின் உண்மையான பயணம் புரிந்துகொள்ளப்பட்டு சாட்சியமாக்கப்படுகிறது.

திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்

### இன்றைய இறைவார்த்தை:

எசாயா 50: 4-7

திருப்பாடல்: 22: 8-9, 17-20, 23-24

பிலிப்பியர் 2: 6-11

லூக்கா 22: 14-23:56 (அ) 23: 1-49

INTERNAL CIRCULATION ONLY
BUL 15/2025

பங்களிப்பு: மாமறைமாவட்ட மனித வள மேம்பாட்டு அலுவலகம் (AOHD
**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org